JUDICIAL MAGISTRATE COURT, TIRUTTANI
DEPOSITION OF WITNESS

MC.No.1/2018 Date:23.01.2021 R.W.4

பெயர் : ஆறுமுகம்
தந்தை பெயர் க.பெ. :ஏழுமலை
முகவரி :
கிராமம் : வில்லிவாக்கம், சென்னை
மாவட்டம் :
ஜாதி :
தொழில் : உதவி ஆணையாளர் காவல் துறை, பணி ஓய்வு
மதம் :
வயது :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 23rd day of January 2021.

குறுக்கு விசாரணை

நான் காவல் துறையில் உதவி ஆணையராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். பணியிலிருந்து ஓய்வு பெற்று ஓய்வு ஊதியம் பெற்றுவருகிறேன் என்றால் சரிதான். தற்போது ஓய்வு ஊதியம் ரூ.41,130/ வாங்கி வருகிறேன். எனது மகன் சிவபாலன் தற்சமயம் 1லட்சம் ரூபாய்க்கு மேல் மாதம் ஊதியம் பெறுகிறார். குறிப்பாக எவ்வளவு வாங்கிவருகிறார் என்று எனக்கு தெரியாது. தற்போது நான் 2ஈ யமுனா பிளாட் சியாம் தீர்த் அப்பார்ட்மென்ட் 2வது மெயின் ரோடு வடக்கு ஜெகநாதன் நகர் வில்லிவாக்கம், சென்னை 49 என்ற முகவரில் உள்ள எனது சொந்த பிளாட்டில் 2010ம் ஆண்டிலிருந்து வசித்துவருகிறேன். 26.6.2015 லிருந்து முதல் மனுதாரரும் எதிர் மனுதாரரும் தனித்தனியாக பிரிந்து வாழ்ந்துவருகிறார்கள் என்றால் சரிதான். மேற்படி தேதிலிருந்து முதல் மனுதாரருக்கோ, 2ம் மனுதாரருக்கோ மருத்துவ உதவி அத்தியாவசய தேவைகளுக்கான பண வசதி ஆகியவற்றை நீங்களோ உங்கள் மகனோ செய்து கொடுத்தீர்களா என்றால் செலவு செய்ய தயாராக இருந்தேன் ஆனால் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. மனுதாரர்களுக்கு நீங்களோ உங்கள் மகனோ எவ்விதமான செலவும் செய்வதற்கு தயாராக இல்லை வழக்கிற்காக பொய் சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல. மனுதாரர் திருமணத்திற்கு பின்னிட்டு முதல் மனுதாரருக்கு எவ்விதமான வேலையும் இல்லை மனுதாரர்கள் முதல் மனுதாரரின் பெற்றோரின் பராமரிப்பில் தான் இருந்துவருகிறார்கள் என்றால் சரிதான். உங்கள் முதல் விசாரணை பிராமண வாக்குமூலத்தில் பத்தி 4, 5, 6 ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் குறிப்பிட்டு எந்த தேதியில் நடந்தது என்று கூறவில்லை என்றால் சரிதான் ஆனால் அதில் குறிப்பிட்டுள்ள சம்பவம் உண்மை தான் தேதி குறிப்பிடபடவில்லை. அவ்வாறு உண்மையில் சம்பவம் நடைபெற்றிருந்தால் தேதி, மாதம் குறிப்பிட்டு இருப்பீர்கள் இதிலிருந்தே மேற்படி சங்கதிகள் கற்பனையானவை என்றால் சரியல்ல. முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 6ல் முதல் மனுதாரர் ரூ.7 லட்சம் கொடுக்காவிட்டால் கத்தியை வைத்து குத்தி கொள்ள முயற்சி செய்ததாக குறிப்பிட்டுள்ளது உண்மை எனில் நீங்கள் காவல் நிலையத்தில் அது குறித்து புகார் கொடுத்திருப்பீர்கள் என்றால் சம்பவம் உண்மை குடும்பம் கவுரவம் கருதி காவல் நிலையத்திற்கு செல்லவில்லை. அவ்வாறு ஒரு சம்பவம் நடக்கவில்லை என்றால் சரியல்ல. முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 7ல் 2015, 2016, 2017ம் வருடங்களில் மனுதாரர்கள் மற்றும் எதிர் மனுதாரரை சேர்ந்து வாழ

வைப்பதற்கு எடுக்கபட்ட முயற்சிகள் பற்றி கூறியுள்ளது வழக்கிற்காக பொய்யாக சொல்லபட்டுள்ளது என்றால் சரியல்ல சம்பவம் உண்மை. திருமணத்தின்போது முதல் மனுதாரருக்கு 76 பவுன் நகையும், எதிர் மனுதாரருக்கு 16 பவுன் நகை மற்றும் மற்ற சீர்வரிசை பொருட்கள் மனுதாரர் வீட்டிலிருந்தே கொடுக்கபட்டது தற்போது உங்கள் வசம் தான் உள்ளது என்றால் சரியல்ல சீர்வரிசை பொருட்கள் எங்களிடம் இல்லை. திருமணத்திற்கு பின்னிட்டு முதல் மனுதாரர் எதிர் மனுதாரருடன் சொத்தை பிரிவினை செய்ய சொல்லியுள்ளதாக கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் கற்பனையானது என்றால் சொத்து பிரிவினை செய்ய வற்புறுத்தியது தான் இவ்வளவு பிரச்சனைக்கு காரணம். மனுதாரருக்கு உங்கள் குடும்பதாருக்கு எவ்வளவு சொத்து உள்ளது என்ற விவரம் தெரியாது அவ்வாறு இருக்க சொத்து பாக பிரிவினை கோரினார் என்றால் சரியல்ல எங்கள் குடும்ப சொத்து ஒவ்வொன்றும் அவருக்கு தெரியும். 24.4.2012ல் முதல் மனுதாரருக்கு குழந்தை பிறந்தபோது மருத்துவமனை வராண்டாவிலேயே இருந்து மனுதாரரை கவனித்துக்கொண்டதாக கூறுவது தவறு என்றால் சரியல்ல மேற்படி 24.4.2012 முதல் மனுதாரருக்கு நடந்த சிசேரியன் அறுவை சிகிச்சையின் போது ஒவ்வொரு முறையும் நான் தான் ஒவ்வொரு பதிவேட்டிலும் கையொப்பம் செய்துள்ளேன். மேற்படி 24.4.2012 அன்று மனுதாரரின் தாயார் தான் மனுதாரரை இருந்து கவனித்துக்கொண்டார் நீங்கள் வழக்கிற்காக பொய் சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல. முதல் விசாரணை வாக்குமூலத்தில் 2ம் மனுதாரர் தகப்பனார் பெயரை பள்ளி பதிவேடுகளில் முதல் மனுதாரர் மாற்றி கொடுத்துள்ளதாக கூறுவது தவறு என்றால் சரியல்ல தகப்பனார் பெயர் மாற்றி கொடுத்துள்ளார் 2ம் மனுதாரர் இனிசியலையும் மாற்றி கொடுத்துள்ளார். தற்போதும் முதல் மனுதாரர் கல்லூரி வாழ்க்கையில் அனுபவிக்கவேண்டி தான் தற்போதும் கல்லூரில் படித்துவருகிறார் என்று கூறுவது ஏற்றுக்கொள்ள கூடியது அல்ல என்றால் சரியல்ல குழந்தையை கவனிக்காமல் 2012ம் வருடத்திலிருந்தே கல்லூரி வாழ்க்கையை தான் வாழ்ந்துவருகிறார் அதனால் எங்கள் பேத்தி வாழ்க்கை தான் பாதிப்புக்குள்ளாகிறது. முதல் மனுதாரர் தனது சொந்த காலில் நிற்கவேண்டும் என்பதற்காகவும் எதிர் மனுதாரர் மனுதாரர்களுக்கு பராமரிப்பு செலவிற்காக எவ்வித பணம் வசதியும் செய்து கொடுக்காததனால் தான் முதல் மனுதாரர் படிக்க வேண்டி சூழ்நிலையில் உள்ளார் என்றால் சரியல்ல. முதல் மனுதாரர் மற்றும் 2ம் மனுதாரரை எதிர் மனுதாரர் கணவர் மற்றும் தந்தை என்ற முறையில் மனுதாரர்களை சரிவர கவனித்துவராத காரணத்தினால் தான் மனுதாரர்கள் 2015ம் வருடம் முதல் தனித்து வாழ்ந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல முதல் மனுதாரர் எனது மகனான எதிர் மனுதாரரை கணவனாக கூட இல்லை ஒரு மனிதனாக கூட மதிக்கவில்லை என்பது தான் உண்மை. மனுதாரர் மற்றும் மனுதாரர் குடும்பம் மனுதாரர்கள் மற்றும் எதிர் மனுதாரர் சேர்ந்து வாழ பல முயற்சிகள் எடுத்தும் எதிர் மனுதாரர் தான் சேர்ந்து வாழ விருப்பம் இல்லாமல் தனித்து வாழ்ந்துவருகிறார்கள் என்றால் சரியல்ல உண்மையில் நாங்கள் தான் மூன்று முறை சேர்ந்து வாழ வைப்பதற்கு முயற்சி செய்தோம். அசா.2 மற்றும் 3 ஆகியோர் உங்களின் அதிகார பலத்தினால் இந்த வழக்கிற்காக ஜோடிக்கபட்ட சாட்சிகள் என்றால் சரியல்ல அவர்கள் சமுதாயத்தில் நல்லவர்கள்.

மறு விசாரணை : இல்லை.

Typed to my dictation in open court.
Read over to the witness and admitted
by the witness as correct.

Judicial Magistrate,
Tiruttani.